(iii) புழு, பூச்சிகளை உட்கொள்ளும் மீன்களை நகரில் உள்ள சுமார் 40,000 கிணறுகளில் விட்டு வளர்ப்பதன் மூலம் அவற்றில் கொசுக்கள் ஒழிக்கப்பட்டன. 1967 ஜனவரி வரையில் நீரில் குளோரின் கலப்பது மூல மாக காலரா ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அச்சமயத் தில் மாநகரில் வாந்திபேதி பரவும் நிலையிருந்ததால் அவை அகற்றப் பட்டன, அல்லது அழிக்கப்பட்டன. கொசுக்கள் பெருமளவில் உற்பத்தி யாவதற்கு இக்கிணறுகள் வாய்ப்பாக இருப்பதால், அவற்றில் மீண்டும் அந்தவகை மீன்கள் விட்டு வளர்க்கப்படுகின்றன.

(iv) காற்றுப்போக்கி வசதியுடன் கூடிய தூய்மைத் தொட்டிகள் புதிய குடியிருப்புகளில் அமைக்கப்பட்டுள்ளன. அவை கொசுக்கள் பெருமளவில் பெருகக் கூடிய இடங்களாகும். கொசுக்கள் அவற்றுள் புகாமல் தடுப் பதற்கான சாதனங்களைக்கொண்டு அந்தக் காற்றுப்போக்கிகளை அக்குடி யிருப்புகளின் உரிமையாளர்கள் அல்லது அவற்றில் குடியிருப்பவர்கள் மூடிவைக்கவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். மாளிகை போன்ற அமைப்புள்ள வீடுகளில், பெரும்பாலும் காணப்படுகிற தொட்டிகள், நீர்த் தொட்டிகள், எருக்குழிகள், பழம் பானைகள் போன்றவற்றில் கொசுக்கள் பெருக வாய்ப்புள்ளதால், அவை குறித்துத் தக்க நடவடிக்கைகள் எடுக் கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(v) பக்கிங்காம் கால்வாயும், ஆறுகளும் கொசுக்கள் உற்பத்தியாகிப் பெருகும் நிலையான இடங்களாகும். இந்த நீர்நிலைகளும் நகரில் உள்ள முக்கிய கழிவு நீர் வாய்க்கால்களும் கொசுபோன்ற பூச்சிகள் மிகுதியாகப் பெருகிப் பரவுவதற்குக் காரணமாகின்றன. அதன் விளைவாக, எண்ணற்ற வர்கள் தொல்லைக்குள்ளாகின்றனர். அவற்றின் ஓரங்களைச் செம்மைப் படுத்துவதின் மூலமும், பாசியை அகற்றுவதன் மூலமும், அவற்றில் புழுக் கொல்லி மருந்துகள், சலவைப்பொடி முதலியவற்றைக் கலப்பதன் மூலமும், கொசுக்கள் பெருகாமல் இருக்க மாநகராட்சி இயன்ற அளவுக்கு முயன்று வருகிறது. அவ்வாறு செய்வதன் மூலம் கொசுக்கள் பரவுவது தடுக்கப்படுவதுடன் அவற்றிலிருந்து வெளிவரும் நாற்றமும் குறையும்.

நகரில் கொசுத் தொல்லையை நீக்க இயன்றவரை எல்லா நடவடிக்கை களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மேற்கூறியவற்றிலிருந்து அறியலாம். இதனால் கடந்த சில வாரங்களாகக் கொசுத்தொல்லை குறிப்பிடத்தக்க அளவுக்குக் குறைந்துள்ளது.

APPENDIX III.

[*Vide* answer to Starred Question No. 139 on page 24.]

(*a*) There are 15 First Grade Municipalities, 18 Second Grade Municipalities, 44 Third Grade Municipalities and four Township Committees in Tamilakam. There are also five Selection Grade Municipalities and two Special Grade Municipalities in Tamilakam.

(*b*) *The criteria for upgrading and reclassifying the municipalities*—

(1) *Third Grade.*—Municipality having a population less than 35,000 with an annual income of Rs. 1,00,000.

(2) *Second Grade.*—Municipality having a population between 35,000 and 50,000 with an annual income exceeding Rs. 3,50,000, i.e., Municipality having a per capita income exceeding Rs. 10.

1968 மார்ச் 4]

(3) *First Grade.*—Municipality having a population between 50,000 and 100,000, with an annual income exceeding Rs. 7,50,000, i. e., Municipality having a per capita income exceeding Rs. 15.

(4) *Selection Grade.*—Municipality having a population between 100,000 and 250,000 and annul income exceeding Rs. 20,00,000, i. e., Municipality having a per capita income exceeding Rs. 20.

(5) *Special Grade.*—Municipality having a population exceeding 250,000 and an ordinary annual income exceeding Rs. 75 lakhs, i. e., Municipality having a per capita income exceeding Rs. 30.

இணைப்பு III.

(அ) தமிழகத்தில் முதல் நிலை நகராட்சிகள் பதினைந்தும், இரண்டாம் நிலை நகராட்சிகள் பதினெட்டும், மூன்றும் நிலை நகராட்சிகள் நாற்பத்து நான்கும், நகர் பகுதிக் குழுக்கள் (Township Committees) நான்கும் உள்ளன. மேலும், தமிழகத்தில் தேர்வு நிலை நகராட்சிகள் (Selection Grade Municipalities) ஐந்தும், சிறப்பு நிலை நகராட்சிகள் (Special Grade Municipalities) இரண்டும் உள்ளன.

(இ) நகராட்சிகளின் தரத்தை உயர்த்துவதற்கும் மீண்டும் வகைப் படுத்துவதற்கும் உரிய அளவு கோல்கள்—

(1) **மூன்றும் நிலை நகராட்சிகள்.**—மக்கட் தொகை 35,000-க்கும் குறைந்திருந்து, ரூ. 1,00,000 ஆண்டு வருவாய் உள்ள ஒரு நகராட்சி.

(2) **இரண்டாம் நிலை நகராட்சிகள்.**—மக்கட் தொகை 35,000 முதல் 50,000 வரையில் இருந்து, ரூ. 3,50,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சி. அதாவது, தனி நபர் வருமானம் ரூ. 10-க்கு மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி.

(3) **முதல் நிலை நகராட்சிகள்.**—மக்கட் தொகை 50,000 முதல் 100,000 வரையில் இருந்து, ரூ. 7,50,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சிகள். அதாவது, நபர்வாரி வருமானம் ரூ. 15-க்கு மேல் மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி.

(4) **தேர்வு நிலை நகராட்சிகள்.**—மக்கட் தொகை 100,000 முதல் 250,000 வரையில் இருந்து ரூ. 20,00,000-க்கு மேற்பட்ட ஆண்டு வருவாய் உள்ள நகராட்சி. அதாவது நபர்வாரி வருமானம் வரி ரூ. 20-க்கு மேற்பட்ட ஒரு நகராட்சி.

(5) **சிறப்பு நிலை நகராட்சிகள்.**—250,000-க்கு மேற்பட்ட மக்கட் தொகை இருந்து ரூ. 75,00,000-க்கு மேற்பட்ட சாதாரண ஆண்டு வருவாய் உள்ள ஒரு நகராட்சி. அதாவது, நபர்வாரி வருமான்ம் ரூ. 30-க்கு மேற்பட்டுள்ள ஒரு நகராட்சி.